[8th March 1965

9–00 a.m. **திரு. வை. சங்கரன் :** உதாரணமாக இங்குள்ள சில சினிமாக் கொட்டகைகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய "விமன் பை நைட்" "யூனிவர்ஸ் பை நைட்" போன்ற படங்களின் விளம்பரப் படங்கள் கொட்டகைகளின் வெளியே வைக்கப்பட்டிருக்கின்றன. இதன் விளம்பரச் சுவரொட்டிகள் மிகவும் கீழ்த்தரமான உணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இதனால் பல விதமான இடைஞ்சல்கள் ஏற்படக்கூடும். ஆகவே இது போன்ற ஆபாசச் சுவரொட்டிகளைத் தடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த மாதிரியான சுவரொட்டிகள் அங்கங்கே ஒட்டப்படுகின்றன என்று பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளைப்பற்றி கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசாங்கத்திலிருந்து வந்திருக்கக்கூடிய உத்தரவின் கீழ் ஆங்காங்கு இருக்கின்ற கலெக்டர்களுக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் எந்தெந்த ஐ.பி.சி. பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றி விசாரித்துக் கேட்டு எழுதப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து ரிப்போர்ட் வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன் : விஷம் தலைக்கு ஏறிய பின்னால் நடவடிக்கை எடுத்துப் பிரயோசனம் இல்லை. ஆகவே இதைத் தடுப்பதற்கு அவசரமாக நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன் வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நடவடிக்கைகள் எல்லாம் சட்டப்படி எடுக்க வேண்டும். அவசரப்பட்டு சட்டவிரோதமாக ஏதாவது நடவடிக்கை எடுத்தால் வெறும் விஷம் மாறி, பாம்பு விஷம் போல் ஏறி, நம்முடைய அடிப்படை நோக்கமே கெட்டு விடும்.

திரு. இராம. அரங்கண்ணல் : கடந்த இரண்டு மூன்று மாதங்களாக நிதி காரியங்களுக்காக நடத்துகிறோம் என்று சொல்லி, சில பிரபல கல்யாண மண்டபங்களில் மேல் நாட்டுமுறையில் "பால் டான்ஸ்" முதலியவைகள் நடந்து வருகின்றன. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கல்யாண மண்டபங்கள் தனிப்பட்டவர்களுடைய இடங்கள். அதில் எந்தவிதமான காரியங்கள் நடைபெறுவதற்கும் அவர்கள் அனுமதி கொடுக்கலாம். அதற்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொள்வதற்கில்லை.

Advance to the Corporation of Madras for purchase of Pipes

* 182 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the sum of Rs. 50 lakhs was given as advance for the purchase of pipes to the Corporation of Madras; and

8th March 1965]

(*b*) if so, whether the entire amount had been utilised?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No Sir.

(*b*) Does not arise.

MR. SPEAKER : Questions are over.

[**Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II. ADJOURNMENT MOTION *re.* STATIONING OF INDIAN ARMY PERSONNEL IN SOME PLACES.

SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I wish to draw the attention of the Hon. the Chief Minister to the following matters of urgent public importance, viz. :—

" That this House do stand adjourned to discuss the situation created by the stationing of the Units of the Indian Army personnel in various district headquarters, urban centres and rural areas and the recent announcement of the Inspector-General of Police to continue the stationing of the said Units for a period of six months causing thereby panic, unrest and fear in the mind of the people residing in those areas and resulting in their desertion of habitation and livelihood, leaving crops, cattle and property, their hearth and home and flying to nearby jungles, thus curtailing their freedom of movement and preventing them from carrying on their normal avocations. "

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அவசரப் பிரேரணைக்குரிய விஷயத்தைப் பற்றித் தங்கள் முன்னால் சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். இதிலுள்ள சில முக்கியமான கருத்துக்களை மட்டும். . .

கனம் சபாநாயகர் : இதில் என்னென்ன சொல்லவேண்டுமோ அதைப்பற்றி எல்லாம் கனம் அங்கத்தினர் தங்கள் பிரேரணையில் பலமாகச் சொல்லியிருக்கிறார்கள். . .

திரு. கே. ஏ. மதியழகன் : இதைப்பற்றிய எக்ஸ்ப்ளனேஷனை மட்டும் குறிப்பிடுகிறேன் . . .

கனம் சபாநாயகர் : எக்ஸ்ப்ளனேஷன் வேண்டியதில்லையே, கனம் அங்கத்தினர் கொடுத்திருக்கின்ற எக்ஸ்ப்ளனேஷன் போதுமானது. இதில் குறிப்பிடாத வேறு ஏதாவது ரூல்ஸ், லா ஏதாவது இருக்குமானால் அதைப்பற்றி மட்டும் சொல்லலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்படி ஒரு நாட்டில் சிவில் லா இருக்கும் போது மிலிட்டிரியை கொண்டு வந்து வைத்திருப்பதும், இதன் மூலமாக அரசியல் சட்டத்தின் மூலமாக மக்களுக்கு இருந்து வந்த "ப்ரீடம்" சுதந்திரம், ப்ரொஃபெஷன், பிசினஸ் இவைகளில் இன்றைக்குச் சுதந்திரமாக ஈடுபடுவதற்கு முடியாத அளவில், இங்கு கொண்டுவைத்திருக்கின்ற மிலிட்டிரிகளின் மூலமாகத் தடை ஏற்படுகிறது. மக்களுக்கு